C

# அறிவித்தல்

அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட "மனித உறிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்)" எனும் தனியார் உறுப்பினர் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதென்பதை அறிவிக்க விரும்புகிறேன்.

இச்சட்டமூலம் உயர் நீதிமன்றத்தினால் பரிசீலிக்கப்பட்டு, சட்டமூலத்தின் 6ஆம் வாசகம் அரசியலமைப்பின் 76(1) ஆம் உறுப்புரைக்கு முரணானதெனவும், சட்டமூலத்தின் 7ஆம் வாசகம் அரசியலமைப்பின் 3ஆம் 4ஆம் மற்றும் 12(1) ஆம் உறுப்புரைகளுக்கு முரணானதெனவும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதனடிப்படையில், சட்டமூலம், அரசியலமைப்பின் 84ஆம் உறுப்புரையின் (2)ஆம் உட்பிரிவின்கீழ் விசேட பெரும்பான்மையொன்றின் மூலம்மும் அரசியலமைப்பின் 83ஆம் உறுப்புரையின் பிரகாரம் மக்கள் தீர்ப்பொன்றின் மூலம்மும் அங்கீகரிக்கபடுதல் வேண்டுமெனவும் அரசியலமைப்பின் 123(2)ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்.